**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**

**முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு.

**2026-ம் வருடம் ஜூன் மாதம், 27-ம் நாள், சனிக்கிழமை**

**ஆண்டு பட்டியல் வழக்கு எண்.129/2026**

**CNR NO: TNTJ160009122026**

அரசுக்காக: உதவி ஆய்வாளர்,
திருவையாறு காவல் நிலையம்,
(குற்ற எண்.117/2017) ...குற்றமுறையிடுபவர்

//எதிராக//

1. லலிதா,
   த/பெ. குணசேகரன்,
2. ஜீவிதா,
   த/பெ. கோபி,
3. கோபி,
   த/பெ. நாகராஜன்,
   1 முதல் 3 எதிரிகளின் வசிப்பிடம்
   காளியம்மன்கோவில் தெரு,
   கல்யாணபுரம். ...எதிரிகள்

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | CASE SUMMARY | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (i) | **The Period of remand of the accused** | : | | **Name of the Accused** | **Date of Remand** | **Release on** |
| | | | 1 | Lalitha | Anticipatory Bail Order dated 06.04.2017 in Cr.M.P.No. 879/2017 by Honourable Principal District and Sessions Court, Thanjavur | |
| | | | 2 | Jeevitha | | |
| | | | 3 | Gopi | | |
| (ii) | **The date of filing of the complaint/final report in the Court** | : | | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | | | 25.03.2017 | 01.04.2026 | |
| (iii) | **The date of committal of** | : | | | | |

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:30:41 +0530

<table>
<tr><td></td><td>the case to the Court of Session</td><td></td><td colspan="4">NIL</td></tr>
<tr><td>(iv)</td><td>The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe</td><td>:</td><td colspan="4">04.06.2026</td></tr>
<tr><td rowspan="3">(v)</td><td rowspan="3">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code</td><td rowspan="3">:</td><td colspan="2">Crl.M.P.No.</td><td>Date of Filing</td><td>Result</td></tr>
<tr><td colspan="2">1522/2026<br>u/s 320 Cr.PC</td><td>04.06.2026</td><td>Dismissed</td></tr>
<tr><td colspan="2">1700/2026<br>u/s 311 Cr.PC</td><td>25.06.2026</td><td>Allowed</td></tr>
<tr><td rowspan="3">(vi)</td><td rowspan="3">Date of examination in-chief and cross-examination of a witness</td><td rowspan="3">:</td><td colspan="2">Name of the Examination</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW1</td><td>Kalairani</td><td>04.06.2026</td><td>04.06.2026</td></tr>
<tr><td>PW2</td><td>Pazhaniammal</td><td>04.06.2026</td><td>04.06.2026</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>Pw3</td><td>Udhayachandran(IO)</td><td>25.06.2026</td><td>25.06.2026</td></tr>
<tr><td>(vii)</td><td>Date of examination of the accused U/Sec 313 of the Code</td><td>:</td><td colspan="4">27.06.2026</td></tr>
<tr><td>(viii)</td><td>Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and</td><td>:</td><td colspan="4">Not Applicable.</td></tr>
<tr><td rowspan="2">(ix)</td><td rowspan="2">Grant of stay by superior Courts and the results thereof</td><td rowspan="2">:</td><td>Sessions Court CMP Numbers</td><td colspan="2">High Court No and Date of Stay</td><td>Result</td></tr>
<tr><td colspan="4">NIL</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 1–வது குற்றச்சாட்டு | : | 1–வது எதிரி புகார்தாரரை பொது இடத்தில் காமகுரோதமான வார்த்தைகளால் திட்டிய செயலுக்காக இதச பிரிவு 294(b)–ன் கீழ் |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:30:47 +0530

Date: 27.06.2026

JM Court, Thiruvaiyaru.

| | | |
|---|---|---|
| 2-வது குற்றச்சாட்டு | : | 1-வது எதிரி புகார்தாரரின் வலது கை கட்டை விரலில் கடித்தும், 2, 3 எதிரிகள் புகார்தாரரை கம்பால் மாறி மாறி அடித்தும் சொர்ப்பகாயத்தை ஏற்படுத்திய செயலுக்காக இதச.பிரிவு.324-ன் கீழ் |
| 3-வது குற்றச்சாட்டு | | எதிரிகள் அனைவரும் புகார்தாரரை கொல்லாமல் விடமாட்டேன் என்று புகார்தாரருக்கு கொலை மிரட்டல் விடுத்த செயலுக்காக இதச.பிரிவு.506(ii)-ன் கீழ் |
| 4-வது குற்றச்சாட்டு | : | 3 வது எதிரி புகார்தாரரை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் அவமானத்தை ஏற்படுத்தும் வகையில் பேசி வன்கொடுமை செய்த செயலுக்காக தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன்கீழ் |
| எதிரிகளின் பதில் | : | பொய் வழக்கு. |
| நீதிபதியின் தீர்மானம் | : | குற்றவாளிகள் இல்லை என முடிவு. |
| உத்தரவு (அ)<br>தண்டனை | : | 1. 1, 2, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள். 294(b), 324, 506(ii) கீழும், 3வது எதிரி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள். 324, 506(ii) கீழும் தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழுமமான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு.248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்யப்படுகிறது.<br>3இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை. |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:30:53 +0530

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 01.04.2026–ம் தேதி ஆண்டுபட்டிகை வழக்கு எண்.129/2026 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 27.06.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A. ராஜராஜன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்றுவரை என் ஆய்வில் வைத்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>தீர்ப்புரை</u>**

எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழ் திவையாறு காவல் நிலைய உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. கு.வி.மு.ச.பிரிவு.173–ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின் படி வழக்கின் சுருக்கம்:–</u>**

புகார்தாரருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் புகார்தாரர் வீடு கட்டிவருவதை கண்டு பொறாமை கொண்ட 1 முதல் 3 எதிரிகள், 24.03.17ம் தேதி இரவு 8 மணிக்கு புகார்தாரர் கட்டிய வீட்டை இடித்ததை கேட்ட புகார்தாரரின் மாமியார் பழனியம்மாளை எதிரிகள் மூவரும் சேர்ந்து கை கால்களால் அடித்து உதைத்துள்ளனர். இதை கண்டு புகார்தாரரின் மாமனார் பிரச்சனையை விலக்கிவிடும்போது, கீழே விழுந்து அவரது தலையில் காயம்பட்டது. 25.3.2017–ஆம் தேதி காலை 6 மணியளவில் புகார்தாரர் தனது வீட்டில் இருந்தபோது, 1–வது எதிரி தகாத வார்த்தைளால் திட்டி, புகார்தாரரின் வலது கை கட்டை

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.27 19:30:57 +0530

விரலில் கடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தியும், 2, 3 எதிரிகள் புகார்தாரரை கம்பால் மாறி மாறி அடித்தும், 1 முதல் 3 எதிரிகள் புகார்தாரரை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியும், இ.த.ச. பிரிவுகள். 294(b), 352, 427, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக திருவையாறு காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு.204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச.பிரிவு.207–ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், 1, 2 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள். 294(b), 324, 506(ii) –ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள். 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, குற்றச்சாட்டுகளை எதிரிகளுக்கு எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தனர். எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அரசுதரப்பில் **அ.சா.1 முதல் 3** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**4. அரசுத்தரப்பு சாட்சியங்களின் படி வழக்கின் சுருக்கம்:–**

புகார்தாரர் கல்யாணபுரத்தில் வசித்து வருகிறார். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் தேதி, புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இடையே சிறிய தகராறு

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:31:01 +0530

ஏற்பட்டது. தற்போது சமாதானமாகிவிட்டனர். வழக்கை மேல் நடத்த விருப்பம் இல்லை. புகார்–அ.சா.ஆ.1–ல் உள்ள கையெழுத்து புகார்தாரருடையது.

கடந்த 25.03.17–ம் தேதியன்று அ.சா.1–புகார்தாரர் கொடுத்த அ.சா.ஆ.1–புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 117/17, ச/பி. 294(b), 324, 506(2) இதச உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை–அ.சா.ஆ–2 பதிவுசெய்து, சம்பவ இடம் சென்று, சம்பவ சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர்–அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம்–அ.சா.ஆ.4 தயார் செயது சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 மற்றும் மகஜர் சாட்சிகளையும், தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகள் நீதிமன்ற முன்பிணையில் சென்றதை தெரிந்துகொண்டு, வழக்கின் புலன் விசாரணை முடித்து, 06.04.2017–ஆம் தேதி எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்

**5.** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் வினவியபோது, எதிரிகள் அவற்றை பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும் பதில் கூறினார்கள். எதிரிகளின் பதில் பதிவு செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

(i) எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள். 294(b), 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழ்

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(ii) எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?என்பதேயாகும்.

**7. தீர்வு:–**

கடந்த, 25.3.2017–ஆம் தேதி காலை 6 மணியளவில் புகார்தாரர் அவரது வீட்டில் இருந்தபோது, 1–வது எதிரி தகாத வார்த்தைளால் புகார்தாரரை திட்டி, புகார்தாரரின் வலது கை கட்டை விரலில் கடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தியும், 2, 3 எதிரிகள் புகார்தாரரை கம்பால் மாறி மாறி அடித்தும், 1 முதல் 3 எதிரிகள் புகார்தாரரை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியும், இ.த.ச. பிரிவுகள். 294(b), 352, 427, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக அரசுதரப்பில் எதிரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதே பிரிவுகளின்கீழ் இந்நீதிமன்றத்தால் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

கடந்த 25.03.2017–ஆம் தேதி 06.00 மணிக்கு வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டு, அன்றையதினமே 14.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 03.04.2017–ஆம் தேதி காலை 10.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வழக்கின் புலன் விசாரணை 06.04.2017–ஆம் தேதி முடிவுற்று, குற்ற இறுதி அறிக்கை 01.04.2026–ஆம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில், புகார்தாரர் அ.சா.1–ஆகவும், கண்ணுற்ற சாட்சி அ.சா.2–ஆகவும், புலன்விசாரணை செய்த அதிகாரிகள் தரப்பில் உதவி ஆய்வாளர் அ.சா.3–ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். ஏனைய பட்டியல் சாட்சிகள் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:31:08 +0530

அ.சா.1 – புகார்தாரர் தனது முதல் விசாரணையில், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் தனக்கும், எதிரிகளுக்கும் இடையே சிறிய தகராறு ஏற்பட்டது என்றும், தற்போது சமாதானமாகிவிட்டோம் என்றும், வழக்கை மேல் நடத்த விருப்பம் இல்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் என்ன எழுதியிருந்தது என்று தான் படித்துப் பார்க்கவில்லை என்றும், அ.சா.2 தனது சாட்சியத்தில், 2–வது எதிரி தனது பேத்தி என்றும், அ.சா.1–க்கும், எதிரிகளுக்கும் இடையே என்ன தகராறு என்று தனக்கு தெரியாது என்றும், தான் ஊரில் இல்லை என்று பிறழ்சாட்சிகளாக மாறி, அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளனர்.

புகார்தாரர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளது, இந்நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. சமரச மனு தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. புகார் பெற்று புலன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்தது குறித்து புலன் விசாரணை அதிகாரி தரப்பில் உதவி ஆய்வாளர் அ.சா.3 சாட்சியம் அளித்திருந்தாலும், மேற்படி சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரி மீதான குற்றச் சம்பவம் நிரூபிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ளமுடியாது.

மாண்புமிகு, உச்சநீதிமன்றம், ***Central Bureau of Investigation /Vs/ Sadhu Ram singh Reported in 2017(1) MLJ Crl 724 SC*** என்ற வழக்கில் *"continuance of criminal proceedings after compromise has been arrived between complainant and accused, would amount to abuse of process of court and exercise in futility. Trial would be prolonged and it may end in decision which may be of no consequence to any parties"* என்று சொல்லியுள்ளது.

மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையிலும் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர் என்று அரசு தரப்பில் சொல்லப்பட்ட அ.சா.1–ன் சாட்சியத்தின்

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.27 19:31:12 +0530

மூலம் எதிரியால் வழக்கு குற்ற சம்பவம் நடைபெற்றதாக நிரூபிக்கப்படாததாலும், இருதரப்பினரும் சமாதானமாக சென்றுவிட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையிலும், எதிரிகளை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று இந்நீதிமன்றம் கருதி, மேற்கண்ட சந்தேகங்களின் பலனை எதிரிகளுக்கு அளித்து, 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள். 294(b), 324, 506(ii) ன் கீழும், 3 வது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள். 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழுமான குற்றச்சாட்டுகளை பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரிகளை விடுதலை செய்யப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

அ.சா.1, எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி நபரை பாதிக்கப்பட்ட நபர் என்ற வரையறைக்குள் கொண்டுவர முடியாது என்று இந்நீதிமன்றம் கருதி, அவருக்கான இழப்பீடு பொறுத்து உத்தரவு ஏதும் வழங்க அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8. முடிவாக,

**1. 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள். 294(b), 324, 506(ii) –ன் கீழும், 3வது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள். 324, 506(ii) உ/இ தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ்**

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.27 19:31:16 +0530

**விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்யப்படுகிறது.**

**3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026**-ம் ஆண்டு **ஜீன்** மாதம் **27**-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:31:25 +0530

நீதித்துறை நடுவர்,

திருவையாறு.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள் :-</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | கலைராணி | புகார்தாரர் |
| அ.சா.2 | பழனியம்மாள் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | உதயசந்திரன் | புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 25.03.2017 | புகார் மனு அசல் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 25.03.2017 | முதல் தகவல் அறிக்கை அசல் | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | 25.03.2017 | பார்வை மகஜர் அசல் | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | 25.03.2017 | மாதிரி வரைபடம் அசல் | அ.சா.3 |

<u>**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள்:–**</u>
**இல்லை.**

<u>**குறிப்பு:–**</u>

1. எந்த சாட்சியமும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.27 19:31:34 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.